COMMISSIONER OF SOCIAL WELFARE
20 OCT 2014
Chintadripet, Chennai-600 002

C40066

தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்

## சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை – முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவி பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பினை ரூ.72,000/– ஆக உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந.5) துறை

அரசாணை (நிலை) எண்.51

நாள் 14.10.2014

ஜய, புரட்டாசி 28, திருவள்ளுவராண்டு 2045

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.199, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 31.12.2001
2. அரசாணை (நிலை) எண்.66, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 12.06.2008.

மேலும் படிக்க:

3. சமூக நல ஆணையரின் கடித எண்.50232/குந.3/2013, நாள் 10.11.2013 மற்றும் 25.09.2014.

---

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயன்பெற குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு திட்டம்–1ற்கு ரூ.50,000/–ஆகவும், திட்டம்–2ற்கு ரூ.12,000/– ஆகவும் நிர்ணயிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், முதலமைச்சரின் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் திட்டம்–2ன் கீழ் பயன்பெற குடும்ப ஆண்டு உச்சவரம்பு ரூ.12,000/–லிருந்து ரூ.24,000/– ஆக உயர்த்தப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திருமண உதவித் திட்டங்களுக்கு ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.72,000/–ஆக நிர்ணயிக்கப்பட்டதைத் தொடர்ந்து முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயன்பெற குடும்ப ஆண்டு உச்சவரம்பினை ரூ.72,000/– ஆக உயர்த்திடக் கோரி மனுக்கள் பெறப்பட்டு வருவதாகவும், அனைத்து நல உதவித் திட்டங்களுக்கும் ஒரே மாதிரியான குடும்ப ஆண்டு உச்சவரம்பை நிர்ணயிக்கலாம் என்பதாலும், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தற்போதுள்ள இந்த வருமான உச்சவரம்பு குறைவாக உள்ளது என்பதன் அடிப்படையிலும், அதிக எண்ணிக்கையில் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த பெண் குழந்தைகள் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்தோடும், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயனடைய

தற்போதுள்ள குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பினை திட்டம்–1க்கு ரூ.50,000/–லிருந்து ரூ.72,000/–ஆகவும், திட்டம்–2க்கு ரூ.24,000/–லிருந்து ரூ.72,000/– ஆகவும் நிர்ணயித்து ஆணை வழங்குமாறு சமூக நல ஆணையர் அரசைக் கோரியுள்ளார். அவ்வாறு முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயன்பெற குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.72,000/–ஆக நிர்ணயிக்கப்படும் பட்சத்தில் அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து விண்ணப்பம் செய்பவர்களுக்கு இதனை அமலுக்கு கொணரலாம் என்றும் சமூக நல ஆணையர் தெரிவித்துள்ளார். இத்திட்டத்தின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/– ஆக உயர்த்தும் பட்சத்தில் ஆண்டொன்றிற்கு கூடுதல் செலவினம் ரூ.30.50 கோடி ஏற்படும் என்று சமூக நல ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் 24.07.2014ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வருமாறு அறிவிப்பு செய்துள்ளார்கள்:-

> “கூலித் தொழிலாளர்கள், அமைப்புசாரா தொழிலாளர்கள், தனியார் மருத்துவமனைகளில் பணிபுரியும் செவிலியர், கடைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், தங்கும் விடுதிகளில் பணிபுரிவோர், உணவகம், பெட்டிக் கடை நடத்துபவர்கள், தெரு வியாபாரிகள், தனியார் மழலையர் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் போன்றோர் மாத வருமானம் சுமார் 5000/– ரூபாய் வீதம், ஆண்டு வருமானம் 60,000/– ரூபாய் வரை ஈட்டும் சாதாரண பிரிவைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். இவர்களும் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் வகையில், தற்போது நிர்ணயிக்கப்பட்ட திட்டம்–1–க்கான வருமான உச்ச வரம்பு 50,000/– ரூபாயையும், திட்டம்–2–க்கான வருமான உச்ச வரம்பு 24,000/– ரூபாயையும் அகற்றிவிட்டு, இரு திட்டங்களுக்கும் பொதுவாக 72,000/– ரூபாய் உச்ச வரம்பு நிர்ணயிக்கப்படும். இதற்காக 31 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்”.

5. சமூக நல ஆணையரின் கருத்துருவை பரிசீலனை செய்த பின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் முதலமைச்சரின் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் திட்டம் 1–ற்கான ஆண்டு வருமான உச்ச வரம்பு 50,000/– ரூபாயையும், திட்டம்–2–க்கான வருமான உச்ச வரம்பு 24,000/– ரூபாயையும் அகற்றிவிட்டு, இரு திட்டங்களுக்கும் ரூபாய் 72,000/– பொதுவான ஆண்டு வருமான உச்ச வரம்பு நிர்ணயம் செய்தும், இதனை இந்த அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் விண்ணப்பிப்பவர்களுக்கு நடைமுறைப்படுத்தவும், இதற்காக 2014–15ம் ஆண்டிற்கு ரூ.31.00 கோடி (ரூபாய் முப்பத்தி ஒன்று கோடி மட்டும்) கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

i) ரூ.25.10 கோடி
2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் 102 குழந்தைகள் நலன் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JX – பெண் குழந்தை நலனுக்கான திட்டத்திற்கு நிதியுதவி–09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை. (கு.தொ.கு. 2235-02-102-JX-0939).

ii) ரூ.5.90 கோடி
2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் 789 ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம்– JN – சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் பெண் குழந்தைகள் நலத்திற்கான நிதியுதவித் திட்டம் – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை. (கு.தொ.கு.2235-02-789–JN- 0935)

103



7. மேலே பத்தி 5ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள இக்கூடுதல் செலவினம் ஒரு "புது துணைப்பணி" குறித்த செலவினமாகும் இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) மேற்கொள்ளப்பட வேண்டும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு செலவு – பொது – 1) துறையிலிருந்து தனியே வெளியிடப்படும் எதிர்பாரா செலவின நிதியிலிருந்து இச்செலவினத்திற்கான முன்பணம் பெறுவதற்குரிய படிவத்தில் தேவையான விண்ணப்பங்களை இவ்வாணையின் நகலுடன் உரிய கணக்குத் தலைப்பு குறித்த விவரங்களுடன் நேரடியாக நிதித் (வரவு செலவு, பொது-1) துறைக்கு அனுப்பும்படி சமூக நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இச்செலவினத்தை 2014-15ம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்கான உரிய செயற்குறிப்புகளை தவறாமல் நிதித் (சந) துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு சமூக நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணையானது நிதித் துறையின் இசைவுடன், அதன் அ.சா.எண்.54906/நிதி(சந5)/2014, நாள் 14.10.2014–ன்படி வெளியிடப்படுகிறது மற்றும் இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1330 (ஆயிரத்து முந்நூற்று முப்பது)

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.மு.பஷீர் அஹமது,
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>

சமூக நல ஆணையர், சென்னை– 600 002.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–600 002.
மாநிலக் கணக்காயர், சென்னை–600 018.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சமூக நல ஆணையரின் வழியாக)
அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்கள் (சமூக நல ஆணையரின் வழியாக)

**<u>நகல்:</u>**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
அமைச்சர் (நிதி) அவர்களின் முதுநிலை உதவியாளர், சென்னை–600 009.
அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகள்
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் அனைத்துப்பிரிவுகள்
நிதி (வ.செ.பொது - I & II / சந) துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்